# இன்பத்தமிழ்

## பிரிவு 3

“யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழியைப் போல் இனிதாவ தெங்கும் காணோம்” என்று சுப்பிரமணிய பாரதியார் கொடியேற்றி வைத்து, “தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்” என்றும் கட்டளையிட்டார்.

“தேமதுரத் தமிழோசை” என்று அவர் குறிப்பிட்டது எம் இன்பத் தமிழைத் தான். தேனிலும் மதுரம் இன்பத்தமிழ். புலவர்களும், மேதைகளும் விலைமதிக்க முடியாத இந்த இன்பத் தமிழை, எம்மைப் போன்ற சிறுவர் படித்து, அறிந்து இன்பமடைய வழிவகுத்தனர்.

கம்பர், வள்ளுவர், இளங்கோ என்று சுப்பிரமணிய பாரதி சுட்டிக் காட்டுவது அவர்கள் கட்டிக்காத்த இன்பத்தையும், தமிழ்மொழியில் கண்ட தெய்வீகத்தையும் தான். அவர்கள் தோன்றி மறைந்தனரே தவிர அவர்கள் நுகர்ந்த இன்பத்தமிழ், சுவை, மணம் குறையவில்லை. சுவையும் மாறவில்லை.

என் தாய் கர்ப்பத்தில் நான் குடிபுகுந்தது முதல் இந்த இன்பத்தமிழ் என் உயிரோடு சேர்ந்து வளர்ந்தது. என் நாபியோடு தன்னைப் பிணைத்துக் கட்டிக் காத்துப் பலமுறை – ஏன் ஒவ்வொரு நொடியும், இன்பத் தமிழை, அவள் அருந்திய பாலோடும், சோறோடும் என்னோடு பகிர்ந்து கொண்டாள். நான் வளர வளர, இடை பெருகப் பெருக அந்த இன்பத் தமிழ்தான் நான் கேட்ட ரகசிய மொழி. “அம்மா” என்று என் அன்னை தன் இடுப்பு வலியைப் போக்கத் திணறும்போதும், நான் குடியிருந்த வயிற்றை அவள் தடவிக் கொடுத்து சுகம் பெறும் போதும், “அம்மா” “அப்பா” “சுவாமி” என்ற இன்பத் தமிழைத்தான் நான் கேட்டேன். என் உயிரோடு அதைச் சேர்த்துப் பிணைத்தார் என் தாய்.

நாங்கள் தனிமையாயிருக்கும் போது … “என் செல்வமே” என்று தேனொழுக ரகசியம் பேசுவாள். அந்த இனிமையில் மயங்கி விடுவேன். ஓகோ… இதுதான் “இன்பத் தமிழா” என் தாய் மொழியல்லவா! என்ற வியப்பில் ஆழ்ந்துவிடுவேன். “என்ன அம்மா” என்ற வினவ வேண்டும் என்று துடிப்பேன் குரல் எழும்பாது. காலையும், கையையும் தான் அசைப்பேன்.

என் அன்னை இறைவணக்கம் பாடிப்பாடி அந்தப் பாதையிலே நான் செல்ல வேண்டும் என்ற ஆவலை அவள் இன்பத் தமிழில் கரங்குவித்து, கடவுளிடம் மன்றாடுவாள். “அம்மா! உன் ஆசையை, உன் ஆசியோடு நான் நிறைவேற்றுவேன்!” என்று சபதம் செய்தேன் அவள் கர்ப்பத்துக்குள், என் இருட்டறையில்.

துன்பத்தை அழிப்பது இன்பம். அதை நிறைவேற்ற என் தாய் மொழியான இன்பத்தமிழ் ஒன்றுக்கு மட்டுமே சக்தியுண்டு. உரிமையும் உண்டு. இன்பத்தமிழ் சுவையான கனி. தமிழ்ப் பற்று, ஊக்கம், கடவுள் பக்தி, குரு பக்தி, பெற்றோர் பக்தி முதலிய நற்கனிகளைக் பிழிந்தெடுத்த பழச்சாறு, இன்பப் பானகம் என் தாய்மொழி. இதற்கு இன்பத்தமிழ் என்ற நாமகரணம் சூட்டுவதில் ஐயமில்லையே!

எண்ணற்ற புலவர்களும், தமிழை உயிரினும் மேலாக மதித்த அறிவாளிகளும் இன்பத் தமிழைப் போற்றி வளர்த்தனர்.